வளன்ஆயம்
நெறிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ஔவையார் பாடல்களில் பண்பாட்டு விழுமியங்கள்

**மெ.சித்திரைச்செல்வி,** *முனைவர் பட்ட ஆய்வாளர், தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 02*

**.ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கிய நூல்களில் ஔவையார் பாடல்களில் பண்பாட்டு விழுமியங்களான பிரிவு உணர்த்தும் செய்திகள் குறித்து இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஔவையார் பாடல்களில் தலைவன், தலைவி, தோழி கூற்றுப் பாடல்களில் காணப்படும் பண்பாட்டு விழுமியச் செய்திகள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.*

**கலைச்சொற்கள்**

*விடரகம், உருமின், சாதனீங்க, குன்றம்*

**முன்னுரை**

*உலகில் செம்மொழி எனப் போற்றப்பெறும் நம் தமிழ்மொழி தனக்கென்று தனித்தன்மையைக் கொண்டு சிறந்து விளங்குகின்றது. சங்க காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கியப் புலவர்களில் ஒருவரான ஔவையார் பாடல்களில் பண்பாட்டு விழுமியங்களையும் பிரிவு உணர்த்தும் செய்திகள் பற்றியும் முல்லைத்திணையின் மக்கள் வாழ்வியல் சிறப்புப் பற்றியும் புறப்பாடலில் ஔவையார் எடுத்துணர்த்திய அதியமானின் கொடைச் சிறப்பு பற்றியும் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

**பண்பாட்டு விளக்கம்**

*பண்பாடு என்பது ஒரு மனிதனின் நல்ல கருத்து மற்றும் நற்சிந்தனைகள் அவற்றை மேன்மேலும் உயர்வடையச் செய்கின்ற நற் குணங்கள் சார்ந்த நல்லொழுக்கத்தே குறிக்கின்றது.*

**பண்பாடு பற்றிய அறிஞர்கள் கருத்து**

பண்பாடு உடலிலும் உடையிலும் வளர்வது இல்லை அது உள்ளத்தோடு ஒன்றிப்போய் ஆத்ம வளர்ச்சியைக் காட்டும் பொருள் என்று சாமர்செட் மாம் கூறுகின்றார்

பண்பு என்பது நல்லன் என்றும் சொல்லப்பட்ட வைகளைத் தெரிந்து கொள்வதே என்று மேத்தா அன்னாட்டு என்பவரது கருத்தாகும்.

பண்பாட்டை விளக்க திருவள்ளுவர் பண்புடைமை அதிகாரம் வகுத்ததைத் காணலாம்.

**விழுமிய விளக்கம்**

ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும் நடத்தைமுறைக்கும் எவையெவை அவசியமென்று கருதப்படுகிறதோ அப்ண்பாட்டினரின் விழுமியங்கள் ஆகும். மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்படும் போது எவை எல்லாம் இன்றியமையாதது எனக் கருத்தப்படுகிறதோ அவை பண்பாட்டு விழுமியங்கள் எனப்படும்.

**படைப்புலகில் ஔவையார்**

ஔவை என்ற சொல்லின்பொருளாக தாய், மூதாட்டி பெண் துறவி, தவப்பெண் என்றெல்லாம் அகராதிகள் கூறுகின்றன என தமிழண்ணல் கூறுகிறார். மணம் செய்து கொள்ளாதிருந்து் தவக்கோலம் தாங்கி கல்விக் கேள்விகளில் மேம்பட்டு விளங்கியப் பெண்டிரை இயற்பெயர் சுட்டாது அவ்வை என்று வழங்குதல் என்பது அருணாச்சலத்தின் கருத்தாகும்.

தமிழ் கூறும் நல்லுலகில் ஔவையார் எனும் பெயர் அறியாதவர் இருந்திருக்க முடியாது, உதாரணமாக அரிச்சுவடியில் உயிரெழுத்து பன்னிரெண்டை குறிப்பிடும் போது ஔ என்ற எழுத்து வரும்போது ஔவை எனச் சொல்லித்தருவது தொன்று தொட்டுவரும் பெரும் வழக்காகும். தமிழகத்தில் வழிவழியாகச் சிறப்புடைய பெண்பாற் புலவர் பலர் ஔவை என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளனர். பெண்ணினத்திற்குச் சிறப்பினைத் தேடும் வகையில் ஔவை வரலாறு அமைகிறது. உலகப் பெண்பாற் புலவர்களிடையே தமிழ் ஔவைக்குச் சிறப்பிடம் உண்டு என்று அறிஞர்கள் போற்றுகின்றன.

கிரேக்கப் பெரும் புலவராகிய சாபோ எனப்படும் பெண்கவிஞருடன் தமிழ் ஔவையை ஒப்பீடுசெய்து திறனாய்வு மூலம் தமிழண்ணல் கூறுகிறார். ஔவையாரை பற்றிய அறிமுகத்தை மு.அருணாச்சலம் இலக்கிய வரலாற்றில் எடுத்துரைக்கின்றார்.

சங்ககால ஔவையின் காலம் கி.பி.2ஆம் நூற்றாண்டு ஆகும். இடைக்கால ஔவை கி.பி.10ஆம் நூற்றாண்டு, சோழர் கால ஔவை காலம் 12ஆம் நூற்றாண்டு, சமயப் புலவர் ஔவை காலம் 14 ஆம் நூற்றாண்டு, பிற்கால ஔவை -1 16, 17 ஆம் நூற்றாண்டு, பிற்கால ஔவையார் -2 காலம் 17, 18 ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். ஆறு ஔவைப் பற்றிய அறிமுகத்தில் சங்ககால ஔவையாரின் படைப்புகளில் அகம், புறம் என பண்பாட்டு விழுமியம் சார்ந்த கருத்துகள் எடுத்துரைக்கின்றன.

சங்க இலக்கியத்தில் ஔவையாரின் பாடல்கள் ஐம்பத்து ஒன்பது ஆகும். அவற்றுள் அகப்பாடலில் இருபத்து ஆறு பாடல்களும், புறப்பாடலில் முப்பத்து மூன்று பாடல்களும் அடங்கியுள்ளன். நற்றிணையில் முல்லைத் திணையில் இரண்டும், மருதத்திணை ஒன்றுமாக இடம்பெறுகின்றது. தோழி கூற்றுப் பாடல்கள் இரண்டும் தலைவன் கூற்றுப் பாடல் ஒன்றும் தலைவி கூற்றுப் பாடல்கள் மூன்றும் கண்டோர் கூற்றுப் பாடல் ஒன்றுமாக காணப்படுகின்றன. குறுந்தொகையில் குறிஞ்சித் திணை மூன்று பாடல்களும் முல்லைத்திணை இரண்டு பாடல்களும், மருத்திணையில் மூன்றும், நெய்தல் திணையில் இரண்டும், பாலைத் திணைப் பாடல்கள் ஐந்தும் உள்ளன. தலைவன் கூற்றுப் பாடல்களாக இரண்டும், தலைவி கூற்றுப் பாடல்களாக எட்டும், தோழி கூற்றுப் பாடல்களாக இரண்டும், பரத்தை கூற்றுப் பாடல்களாக இரண்டும், செவிலி கூற்றுப் பாடலாக ஒன்றும் காணப்படுகின்றன்.

அகநானூற்றில் பாலைத்திணைப் பாடல்கள் நான்கும் தலைவி கூற்று பாடல்கள் நான்கும் காணப்படுகின்றது.

புறநானூற்றில் தும்பை ஆறு பாடல்களும், வாகை ஏழு பாடல்களும், பாடாண் பதிமூன்று பாடல்களும், பொதுவியலில் நான்குப் பாடல்களும், வெட்சித்திணையில் ஒன்றும் கரந்தைத் திணையில் இரண்டும் காணப்படுகிறது.

**பாலைத்திணையில் பண்பாட்டு விழுமியங்கள்**

பாலைத்திணை உணர்த்தும் தலைவன் தலைவியின் பிரிவு என்பது மூன்று வகைப்படும். அவற்றுள் பொருள் வயிற் பிரிதல் என்பது சங்க காலத்திலிருந்து தற்காலம் வரை நிகழக் கூடியது ஆகும். இலக்கியத்திற்கு இலக்கணமாக திகழும் தொல்காப்பியத்திலும் பிரிவு பற்றிய செய்தி இடம் பெறுகிறது என்பதைக் காணலாம்.

**"பொருள் வயின் பிரிதல் அவர்வயின் உரித்தே"[1] (தொல்.பொருள்.35)**

என தொல்காப்பியர் கூறுகிறார் பாலையின் உரிப்பொருளானது பிரிதல் நிமித்தத்தையே உணர்த்தி நிற்கின்றது.

**தலைவனின் பண்பு சார்ந்த விழுமியம்**

தலைவன் தன்னுடைய கடமையினை மேற்கொள்ளும் பொருட்டுத் தலைவியை விட்டுப் பிரியப் போகிறான் என்ற செய்தியைத் தோழி தலைவியிடம் எடுத்துரைக்கிறாள்

**"பொருள் கேளாய் தோழி காதலர்**

**……………………..………………**

**தாம் வினைமுற்றி வருஉம் வரை**

**நாம்மனை வாழ்தும் என்ப"[2] (நற். 129)**

என்ற பாடலில் வினையின் பொருட்டு தலைவன் பிரிய இருப்பதையும், தலைவன் இன்றி நள்ளிரவில் முழங்கிய இடிச்சத்தத்துடன் மத்தியில் உறக்கமின்றி தலைவியின் நலம் வாடப்போவதையும் எடுத்துக்கூறி தலைவனின் கூற்றை நயத்தலுக்கு உள்ளாக்கிக் கூறுகிறாள்.

சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையின் திணைப்பாடலில் பாங்கனிடம் தலைவன் கூறுவதாக வரும் பாடல் வரிகளின் மூலம் பண்பாடு தெரிய வருகிறது.

**"காமாங் குன்றத்துக் கொன்றை போல**

**மாமவை விடரகம் விளங்க மின்னி**

**மாயோன் இருந்த தேஎம் நோக்கி**

**வியலிரு விசும்பகம் புதையப் பாஅப்ப**

**பெயல் தொடங்கினவே பெய்யா வானம்**

**நிழல்திகழ சுடர்த்தொடி ஞெகிழ ஏங்கி**

**அழல் தொடங்கினினே அயிழை அதன் எதிர்**

**குழல் தொடங்கினரே கோவல்**

**தழங்குகுரல் வருமின் காங்கு லானே"[3] (நற்-371)**

இதுகாறும் மழை பெய்யாதிருந்த மேகங்கள் நிறைய மலர்ந்திருக்கின்ற காயாம் மலரங்களையுடை மலையின் கண்ணே இடையே சரக்கொன்றை மலர்ந்தார் போல பெரிய மலை பிளப்பிடங்கள் எல்லாம் விளங்கும் படியாக மின்னி தன் தலைவி இருக்கும் இடம் நோக்கிச் சென்று அகன்றதாகிய எல்லாம் மறையும் படி மழை பெய்யத் தொடங்கி விட்டது. இதனால் தலைவன் தலைவியின் நிலையினை பாங்கனிடம் எடுத்துரைப்பதால் இப்பாடல் அமைவதால் பண்பாட்டு விழுமியம் சார்ந்த கருத்தாக அமைந்திருக்கின்றது.

**தலைவி கார்ப்பருவம் எண்ணிக் காத்திருத்தல்**

தமிழனின் பண்பாட்டு நடைமுறையினை தலைவன் வரவை எண்ணித் தலைவன் வராததால் துன்பத்தில் வருந்தும் நிலையில் தலைவனை எண்ணிக் காத்துக் கொண்டு இருக்கிறாள்.

**"கரைபொரு திரங்கும் கான்யாற் றிகுகளை**

**வேர்கிளர் மாஅத் தந்தளிர் போல**

**நடுங்கலானா நெஞ்சமொ டிடும்பை**

**யாங்கனம் தாங்குவென் மற்றே ஓங்குசெலற்**

**கடும்பகட் டியானை நெடுமான் அஞ்சி**

**ஈர நெஞ்சமொ டிருந்சேண் விளங்கத்**

**தேர்வீ இருக்கை போல**

**மாரி தர்கி மன்றன் நாடல் மழையே"[4] (நற்.381)**

எனும் பாடல் கரையை இடித்துக் கொண்டு காட்டாற்று வெள்ளம் வரும்போது வேர் அரிக்கப்பட்டு நிற்கும் மரத்து தளிர் போர் நடுங்காத நெஞ்சத்தோடு துன்பதை தாங்கிக் கொண்டிருக்கிறன்றாள். அதியமான் நெடுமான் அஞ்சி ஆண் யானை மேல் இருந்து கொண்டு புகழை விரும்பு வீரமுள்ள அன்பு நெஞ்சத்தோடு யானைகளை குடையாக வழங்குவான். அவனுடைய கொடைபோல் மழை பொழிகிறது. தலைவன் வரவில்லை என்று நற்றிணைப் பாடலானது காத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலைசார் பண்பாட்டினை புலப்படுத்துகின்றது.

தலைவனின் பிரிவை தோழியிடம் கூறி தலைவியிடத்தில் எடுத்துக்கச் தான் என்பதால் தலைவனின் பண்பு சார்ந்த விழுமியத்தைக் காணலாம். தலைவிக்கு ஏற்படக்கூடிய இடர்பாடுகளை எண்ணித் தலைவி வருந்துவதாக இப்பாடல் அமைந்திருக்கின்றது.

**“வெந்திறத் கடுவெளி பொங்காப் போந்தென**

**நெற்றுவிளை யுழிஞ்சில் வற்றலார்க்கும்**

**மலையுடை யருஞ்சுர மென்பநம்**

**முலையிடை முனிநர் சென்றவாறே”[5] (குறுந்-39)**

தலைவன் பொருள் தேடப்போகும் வழியில் வாகை நெற்றுக்களின் ஒலிகள் தலைவனுக்கு அச்சத்தை உண்டுபண்ணுவதாக அமைகிறது. இத்தகைய கூற்றானது சங்ககால பண்பாட்டு விழுமியமாக அமைகிறது.

**அறத்தோடு நிற்றல்**

அறத்தோடு நிற்றல் என்பது கற்பின் தலை நிற்றல் என்று பொருள் படும் அறம் என்பது பல பொருள்களையும் தரக்கூடிய சொல்லாயினும் இங்கு பெண்ணிற்கு உரிய முதன்மை பண்பான கற்பையே குறிக்கும், கற்பென்னும் கடைபிடியில் நின்று களவொழுக்கததை பெற்றோருக்கு வெளிப்படுத்துதல் என்பது இத்துறையின் பொருளாகும்.

**“அகவன் மகளே யகவன் மகளே**

**மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்**

**அகவன் மகளே பாடுக பாட்டே**

**இன்னும் பாடுக பாட்டே அவர்**

**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே"[6] (குறுந் 23)**

குறுந்தொகை தோழி ஒருத்தி தலைவியின் களவு ஒழுக்கத்தை புலப்படுத்தி நிற்கிறாள். ஐந்திணை களவுத் துறைகளும் இத்துறை முதற்பெரும் சிறப்புடையது இதனால் தான் ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு தமிழ்மொழியின் தனி இலக்கிய மரபினை அறிவுறுத்த விரும்பிய கபிலர் இத்துறையில் குறிஞ்சிப்பாட்டை இயற்றியுள்ளார்.

**தலைமகன் தோழிக்கு கூறியது**

உலகத்து பண்பு என்பது இல்லறத்தில் இருப்பவன் அதற்குத் தேவையான பொருளைப் தேடுவதற்காகப் பிரிந்து சென்றான் அந்த பொருளை பெற்றப்பிறகு திரும்பி வரவேண்டும் என்பதை குறிப்பிடுகிறது இப்பாடல்

**"மருண்டனென் அல்லெனோ உலகத்துப்பண்பே**

**நீடிய மரா அத்த கோடு தோய் மலிர்நிறை**

**இறைத்துணர் சென்று அற்றாங்கு**

**அனைப்பெருங்காமம் ஈண்டு கனம் கொளலே"[7] (குறுந்.99)**

தலைவன் பொருள் சேர்க்க வேண்டும், குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பி வர வேண்டும் இதற்கிடையில் தலைவியை பிரிந்து இருப்பதால் காமநோய் அவனை வருத்துகிறது. இல்லை எண்ணி தலைவன் எண்ணிய செயல்களாக தோழியிடம் கூறியது உலகத்தின் இயல்பை எண்ணி மீண்டும் மீண்டும் தலைவியை நினைத்திருந்தேன்.

தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு அதியமான் நெடுமான் அஞ்சி அழித்த கிடைத்தற்கு அரிய நெல்லிக்கனி என்றும் கொடைப் பொருள் அவனது கொடைமடம் பட்ட மாண்பை காட்டுகின்றது. சாதல் நீக்கும் அரிய நெல்லிக்கணி என்று அரிந்தும் அதனை தாம் உண்ணாமல் ஔவைக்கு வழங்கிய கொடை திறன் கொடைப் பண்பாட்டின் சிகரமாய் அழைந்துள்ளது.

**“நீல மணிமிடற்றொருவன் போல**

**மன்னுக பெரும நீயே தொன்னிலைப்**

**பெருமலை விடரகத் தருமிகைக் கொண்ட**

**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா**

**தாத னின்னகத் தடக்கிச்**

**சாதனீங்க வெமக்கீத் தனையே”[8] (புறம்.91)**

என்னும் பாடல் சங்கத் தமிழரின் சீர்மிகு கொடைப் பொருளையும் மனநிலையையும் தமிழ் உணர்வையும் ஒருங்கே காட்டும் பதிவாக அமைந்துள்ளது.

**நன்னெறி பண்பாடு**

நல்லவர் வாழும் நிலம் நல்லதென்று பாராட்டப் பெறும் என்று சொல்லும் போது ஔவையார் யாவரும் நன்நெறிப் பற்றி ஒழுங்கினால் மனித வாழ்வு சிறக்கும் என்று அறிவுறுத்துகிறார்.

**“நாடா கொன்றோ காடா கொன்றோ**

**அவலா கொன்றோ மிசையா கொன்றே**

**எவ்வழி நல்லவ ராடவர்**

**அவ்வழி நல்லை வாழிய நிலனே”[9] (புறம்-187)**

என்னும் புற நானூற்றுப் பாடல் தம்மபதப் பாடல் ஒன்றை ஒத்திருப்பதை பிறர் சுட்டிக் காட்டியுள்ளார் தம்மப்பதப் பாடலில் அருகத் துறவிகள் எங்கே வசிக்கிறார்களோ அது நாடாயினும் காடாயினும் பள்ள மாயினும் மேடாயினும் அஃதே அழகான இடம் காடுகள் இன்பம் தருபவை மக்கள் எங்கே இன்புறுவதில்லோ அங்கே விரக்தி அடைந்தவர் இன்புறுகிறார்கள். ஏனெனில் அவர்கள் காமப் பொருட்களை நாடுவதில்லை (தம்பப்பதம் 98. 99) கூறுவது வாழ்க்கை மறுப்பாகும். தமபப்பதம் உலகை வெறுத்து காட்டில் வாழும் துறவினருக்கு மக்களிடமிருந்து தனித்திருக்க உதவும் காடே சிறந்தது என்று இப்பாடல் உலக வாழ்க்கை எடுத்துரைக்கின்றது

**முடிவுரை**

சங்கத் தமிழனின் வாழ்க்கை அகப் பண்பாடு, புறப் பண்பாடு என்னும் இர வகைகளைக் கொண்டதாய் சிறந்து விளங்கின. அகப்பண்பாடு என்பது காதல் சார்ந்த பண்பாட்டை சார்ந்ததாகும். புறப் பண்பாடு வீரம் என்பதை முதன்மையாகவும் கொடை முதலானவற்றை கூறுகளாகவும் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

கொடை என்பது பெருமிதம் நோக்கிய தமிழனின் வாழ்க்கைக்கு வழிகோளும் ஒரு காரணியாக இருப்பதை சங்க பாடல்கள் உணர்த்துகின்றன. அரசன், தோழி, தலைவி, பாங்கன் என வாழ்ந்த பழந்தமிழர் சமுதாயத்தினரை ஒன்றிணைக்கும் ஒன்றாக சங்ககால கொடை பண்பாட்டு விழுமியஙகள் திகழ்வதைக் காண முடிகின்றது.

**சான்றென் விளக்கம்**


1. சுபாஷ் சந்திரபோஸ் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.35
2. ஔவை துரைசாமிப்பிள்ளை, நற்றிணை மூலமும் உரையும், ப.129
3. மேலது, ப.1394
4. மேலது ப.1426
5. இரா.இராகரைவயங்கார், குறுந்தொகை மூலமும் விளக்கமும், ப.43
6. மேலது, 23
7. மேலது .ப.99
8. ஔவை துரைசாமிப்பிள்ளை, புறநானூறா மூலமும் உரையும் ப.228
9. மேலது ப.435
10. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.159
11. மு.நக்கீரன், தமிழ் பண்பாடு, ப.1
12. தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை பெண்புலவர் களஞ்சியம், ப.41
13. மேலது ப.42
14. மேலது ப.43
15. மேலது ப.51
16. தமிழண்ணல் இந்திய இலக்கியச் சிற்பிகள், ப.13
17. மு.அருணாசலம், இலக்கிய வரலாறு, ப.348
18. மேலது, ப.228

**துணை நூற்பட்டியல்**


1. பக்தவத்சல பாரதி - பண்பாட்டு மானிடவியல்,
   மெய்யப்பன் பதிப்பகம்
   சிதம்பரம்
   முதற்பதிப்பு – 1990
2. நக்கீரன் மு - தமிழ் பண்பாடு
   மணிவாசகர் பதிப்பகம்
   முதற்பதிப்பு மார்ச் 2016
   சென்னை 17
3. தாயம்மாள் அறவாணன் - மகடூஉ முன்னிலை பெண்புலவர்
   களஞ்சியம் பச்சைப்பசேல் பதிப்பகம்
   சென்னை முதல் பதிப்பு – 2004
4. தமிழண்ணல் - இந்திய இலக்கியச் சிற்பிகள்
   மத்திய பல்கலைக்கழகம் பெங்களூரு
   முதற் பதிப்பு – 1998
5. அருணாசலம் மு - இலக்கிய வரலாறு
   தமிழியல் ஆய்வு
   மற்றும் வெளியீட்டு நிறுவனம்
   சென்னை -14
6. ஔவை துரைசாமிப்பிள்ளை - நற்றிணை மூலமும் உரையும்
   சாரதா பதிப்பகம்
   முதற்பதிப்பு -2016
   சென்னை -14
7. இராகவையங்கார் இரா - குறுந்தொகை மூலமும் உரையும்
   சாரதா பதிப்பகம்
   முதற்பதிப்பு - 2016
   சென்னை 14
8. ஔவை துரைசாமிபிள்ளை- புறநானூறு மூலமும் உரையும்
   சாரதா பதிப்பகம்
   முதற்பதிப்பு – 2015
   சென்னை 14
9. சுபாஷ் சந்திரபோஸ் (உ.ஆ) -தொல்காப்பியம் பொருளதிகாரம்
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
   முதற் பதிப்பு – 2016
   தஞ்சாவூர்